# Gospel Truth
# காஸ்பல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 16 – International Editor : Michael W.Smith – இதழ் - 16


## முதலாவது சுத்தமாக்கு

மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது.

போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்.அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.உள்ளத்தில் மாயையும், அக்கிரமமும் நிறைந்திருக்கும் (மத்தேயு 23 : 25-28).

அதுபோலவே பரிசேயர்கள் அவர்களுடைய உடைகளில் தங்களை பரிசுத்தமுள்ளவர்களாகவும், நீதியுள்ளவர்களாகவும் காட்டிக் கொள்வார்கள்.இயேசு அவர்களுடைய இருதயங்களை அறிந்து முதலாவது உங்களை சுத்தமாக்குங்கள்.

வஸ்திரங்களைக் காட்டிலும் உங்கள் இருதயமே தேவனுக்கு முன்பாக மேன்மையாய் இருக்க கடவது. அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த பரிசேயர்களைப் போலவே இன்றும் ஜனங்களில் பலர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்களுடைய நற்கிரியைக ளினிமித்தம் நீதியை தேடுவதைக்காட்டிலும் விலையுயர்ந்த வஸ்திரங்களினால் தங்களுக்கு மகிமையை தேடுகிறார்கள்.இயேசு இதை அறிந்து, மாயக்காரரே கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனை தீட்டுப்படுத்தாது.




மாறாக இருதயத்திலிருந்து புறப்படுகிறவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மத்தேயு 15 : 17- 20). மனுஷனுடைய இருதயம் தேவனுக்குப் பிரியமாய் இல்லையெனில் வெளிப்புறமான எல்லா கிரியைகளும் அசுத்தமாயிருக்கும். வெளிப்புறமான எல்லா கிரியைகளும் அசுத்தமாயிருக்கும். வெளிப்புற நற்கிரியையினிமித்தம் தங்கள் அநீதத்தை மறைக்கிறவர்கள் வேசித்தன கள்ளர்களாயிருக்கிறார்கள் நேர்த்தியான, நவீனமான உடையணிவதை கர்த்தர் வேண்டாமென்று சொல்லவில்லை. முதலாவது இருதயத்தை சுத்தமாக்குங்கள் என்று கர்த்தர் போதிக்கிறார். பிறகு வெளிப்புற சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். இருதயத்தின் கனியாகிய நீதி வெளிப்படும்போது ஒரு மனிதன் தன் நேர்த்தியான உடைகளினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசி 2 : 8-9). யாவரோடும் சமாதானமா யிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்க ளாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்த மில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபி 12 : 14). ஆத்தும இரட்சிப்பு பெரிய மாற்றத்தை கொண்டுவரும். இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலை யாக்கப்பட்டு தேவனுக்கு

அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன் (ரோமர் 6 : 22). முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளான பெருமை, கர்வம், காமவிகாரம் ஆகிய கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவி யுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் (எபேசி 4 : 21 -24).


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | ஒருநோக்கு செய்தி | கலாச்சாரம் பக்கம் - 9 | உங்களுக்குத் தெரியுமா? |
| | தலைமைத்துவம் | கிறிஸ்தவரின் உடை | கேள்விக்கென்ன பதில் | ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 9 | பக்கம் - 10-11 | பக்கம் - 12 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;

மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,

1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,

எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;

தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;

1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;

வெளி 18 : 2-4

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;

1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;

1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;

உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;

2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;

2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15

வேதாகமத்திலே உள்ளான மனுஷனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.ஏனெனில் உள்ளான மனுஷனுடைய ஆவி கிறிஸ்துவுக்கு பிரியமானபடி நடந்தால், பரிசுத்தம் என்பது அதற்கு வெளியரங்கமாய் கிடைக்கும் பலன்.வாழ்வின் ஒவ்வொரு செயல்களுக்கும் போதுமான விளக்கங்கள் வேதாகமத்தில் விளக்கமாய் சொல்லப்படாவிட்டாலும் கூட தேவ மகிமைக்கேதுவாக கடைபிடிக்கப்பட வேண்டிய ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. அதை அடித்தளமாக கொண்டே நம் நடை, உடை, பாவனை, செயல்கள் யாவும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும்.உலகப்பிரகாரமான ஜனங்கள் தங்களை நியாயப்படுத்திக் கொள்வார்கள்.

ஆனால் தம்முடையவர்களை கர்த்தர் நிச்சயமாக விடமாட்டார்.உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன் (ஏசா 57 : 15). மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலராகிய பேதுரு சொல்லுகிறார். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (1 பேது 5 : 5). அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது;அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (1 பேது 3 : 4).

பரிசுத்த வாழ்வு என்பது தேவனுடைய பார்வையிலே மிகவும் அழகானது. பரிசுத்த அலங்காரத்தோடே அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே ; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1 கொரி 6 : 19 -20).

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்



பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது – யூதா 1: 3

இந்த இதழில் புறம்பான அலங்கரிப்பு அல்லது கிறிஸ்தவர்களின் உடையைக் குறித்ததான விளக்கத்தைக் காணலாம்.உலகத்திற்கேற்ப சென்றுகொண்டிருக்கும் அநேகருக்கு மத்தியிலே, தேவன் நமக்கு அருளிய வஸ்திரங்களைக் குறித்த அளவுப்பிரமாணத்தைக் கைக்கொள்ளக் கடவோம்.தீமைகளோடு கூடிய இவ்வுலகில் வாழும் தேவஜனங்களாகிய நமக்கும் மற்றவர்களுக்கும் வித்யாசத்தை காண்பிக்க வேண்டும்.தேவசத்தியத்தின் வாயிலாக விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருக்க தேவன்தாமே நமக்கு உதவிசெய்வார்.

கர்த்தருடைய சத்தியத்தை உறுதியாய் பிடித்துக்கொள்ளும்படியாய், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.சில காரியங்கள் உங்களால் புரிந்துகொள்ள இயலாவிட்டாலும், அதைக்குறித்த வேதாகம ஒழுங்குகளை பின்பற்றினால் போதும். உள்ளான மனுஷனே புறம்பான மனுஷனை காட்டிலும் முக்கியமானது. வேசித்தனமும், கர்வமுமாய் வாழ்ந்து கொண்டு இன்பமாய் திளைக்கும் சில ஜனங்களை காணும்போது அதை நிந்தையாக கருதுகிறேன். வெளிப்புற அலங்கரிப்பு என்பது வாழ்வின் ஒரு பகுதியே.நாம் தேவனோடு உள்ள ஐக்கியமே எல்லாவற்றைக் காட்டிலும் மேலானது.

வெளிப்புற அலங்கரிப்பைக் குறித்து குறிப்பிட்டுச் சொல்லும்போதுதான் சில ஜனங்கள் அதை அவமதிக்கிறார்கள்.பரிசுத்த ஆவியைப் பெற்ற ஜனங்களும் கூட சில சமயம் இதைக் குறித்த ஆலோசனைக்கு தூரமாகிறார்கள். இதைக்குறித்து பேசாவிடில் தேவனுடைய திட்டத்தை எப்படி பிறருக்கு அறிவிக்க கூடும்? அதிகமான ஜனங்கள் இந்த ஆலோசனையைக் குறித்து கேள்விப்படாவிடில், அதை பிரசங்கிப்பதும் கடினம்.சில ஒழுங்குகளை நமக்கேற்றபடி மாற்றிக்கொள்ளும்போது அதன் முடிவு ஆவிக்குரிய சரிவு.

தேவசபையின் ஐக்கியத்திலே டை அணிவதைக் குறித்த விளக்கத்தை நினைவுபடுத்துகிறேன் (1910 – 1913) களிலே இருந்த ஒரு விவாதம் டை அணிவது. கழுத்தை சுற்றி அணியும் ஒரு சிறிய அளவிலான துணியாலான டை யை அணிய சிலர் விரும்புவதில்லை.சிலர் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். டை அணிய ஏற்றுக் கொண்டவர்கள் எளிதாக மற்ற சத்தியங்களையும் ஏற்றுக்கொள்ளாமல் சமரசம் செய்ய தயாராகி விடுகிறார்கள். நடைமுறை வாழ்விலே வேத அளவுப்பிரமாணங்களை யாரும் பின்பற்றுவதில்லை.சத்தியத்தின் கொள்கையில் கவனமாயிருப்பது அவசியம். இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பேஷன் உலகில் பெண்கள் அலங்கார அணிவகுப்பில் விதவிதமான கழுத்தை சுற்றி அணியக்கூடிய டை போன்ற கழுத்துப்பட்டைகளை தேர்ந்தெடுத்து அணிகிறார்கள். ஆடை அணிவதில் உள்ள நிபந்தனைகளை கைக்கொள்ள வேண்டும்.

மதப்பூர்வமாகவோ சட்டப்பூர்வமாகவோ தீர்மானிக்க நாங்கள் விரும்பவில்லை.ஆனால் ஆவிக்குரிய வாழ்வை சரியாக வாழ வலியுறுத்துகிறோம்.பரிசுத்தவான்களின் வெளிப்புற வாழ்விலே சில குறைகளைக் கண்டாலும், அதை தூரத்திலே கொண்டு தேவ சத்தியத்தை மாத்திரம் மனதில் கொண்டு வாழ தீர்மானியுங்கள்.இயேசுகிறிஸ்துவில் எளிமையான, சாதாரண வாழ்க்கை வாழ்வது ஆசீர்வாதமானது. நம் அருமை இரட்சகர் இயேசுகிறிஸ்து தாமே சமாதானத்தையும், தைரியத்தையும் அருள்செய்வாராக!

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : புறம்பான அலங்கரிப்பு

**வேத வாசிப்பு:** உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே ; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் - 1 கொரி 6 : 19 - 20.

**விளக்கம்:** தேவனுடைய பரிசுத்தவான்கள் சாதாரண ஆடை அணியவும், ஆபரணங்களின் ஆசைகளினின்று விடுபடவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். புறம்பான அலங்கரிப்பே உள்ளான நம் மனத்தாழ்மையையும், பரிசுத்தத்தையும் வெளிப்படுத்துகிறது.

**I.புறம்பான மனுஷனின் முக்கியத்துவம்**

A. 1 சாமு 16 : 7 மனுஷன் முகத்தை பார்ப்பான்

B. மத் 5 : 14-16 நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்

**II.உள்ளான மனுஷன்**

A. மத் 15 : 17-20 மனுஷனைத் தீட்டுப் படுத்தும்

B. ஏசா 57 : 15 இயேசு ஜனங்களை போஷித்தார்

C. 1 பேது 5 : 5 மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்.

D. 1 பேது 3 : 4-5 இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது.

**III.முதன்மையானதை முதலாவது செய்யவும்**

A. எபேசி 2 : 8-10 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்

B. மத் 23 : 25-28 உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு

**IV.பரிசுத்தத்திற்கென்று அழைக்கப்பட்டோம்**

A. எபி 12 : 14 பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்

B. ரோமர் 6 : 22 பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன்

C. எபேசி 4 : 21 - 24 சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.

D. 1 பேது 2 : 9 தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும்

**V.வேதத்தில் சொல்லப்பட்டுள்ள உடை**

A. ஆதி 3 : 7-10,21 தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும், அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்

B. ஏசா 47 : 2-3 பழைய ஏற்பாடு. உன் நிர்வாணம் வெளிப்படும்.

C. யோவான் 21 : 7 வஸ்திரமில்லாதவனாயிருந்த பேதுரு

D. உபாக 22 : 5 புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது

E. 1 தீமோ 2 : 9 மயிரைப் பின்னி... புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் (1 பேது 3 : 3)

F. 1 தீமோ 4 : 12 விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு

**VI.இப்பிரபஞ்சத்தில் உள்ளவைகள்**

A. ரோமர் 12 : 2 நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்

B. 1 யோவான் 2: 15-17 உலகத்திலுள்ளவைகளில் அன்புகூராதிருங்கள்

**VII.அலங்காரமும், ஆபரணங்களும்**

A. 1 தீமோ 2: 9-10 அழியாத அலங்கரிப்பு (1 பேது 3 : 3)

B. ஏசாயா 3 : 16-24 கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு (எரேமியா 4 : 30)

**VIII.மயிர்**

A. 1 கொரி 11 : 14-15 நீளம்

B. 1 தீமோ 2 : 9, 1 பேது 3 :3 சாந்தமும் அமைதலும்

**I.அளந்து பகிர்ந்த அளவுப்பிரமாணம்**

A. 2கொரி 10 : 12,18 தேவன் எங்களுக்குஅளந்து பகிர்ந்த அளவுப் பிரமாணத்தின்படியே மேன்மை பாராட்டுகிறோம்

B. யோவான் 12 : 48 நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்

C. ஏசாயா 62 : 10 பாதையை உயர்த்துங்கள்

D. 1யோவா 5 : 3 நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்

**முடிவு :**

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார் - சங் 149 : 4



## வரவேற்பு

தேவனுடைய பரிசுத்தவான்கள் சபை ஆராதனைகளுக்கு வேதத்தின் அளவு பிரமாணமான பணிவைக் குறித்து அறியாத மற்ற ஜனங்களை அழைக்க வேண்டும்

## தலைமைத்துவம்

மேய்ப்பனானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் மந்தையாகிய ஜனங்களுக்கு முன்மாதிரியாகவும் வாழ்வின் எல்லா நிலைகளிலும் செயல்பட வேண்டும். ஊழியக்காரர்கள், ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள், பாடகர்கள், ஆயர் என அனைவரும் ஆராதனை வேளையில் மாத்திரமல்ல எல்லா இடங்களிலும் தங்களுடைய உடைகளில் பரிசுத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறாக செய்ய தவறுபவர்கள் தங்களுடைய தலைமைத்துவ நிலைக்கு தகுதியற்றவர்கள்

## புறம்பான அலங்கரிப்பு

# கிறிஸ்தவரின் உடை

**தன்னடக்கம் :** கட்டுக்கோப்பான உணர்வுகள்; துணிவற்ற ; தளர்வற்ற ; சீரான மதிப்பீடு ; தீவிரமாக அல்ல ; ஊதாரிகுணமற்ற

**அமைதிநிலை :** தன்னடக்கம், சாந்தம், தீவிரமாக உணர்ச்சிகளை அடக்கு; அமைதியான

**அவமானம் :** எளிமை ; நாணம் (அ) வெட்கம்



**அந்தகாரத்தினின்று வரவழைக்கப்பட்டோம்**

பரிசுத்த ஜனமாய் வாழும்படி தேவசபையிலே தேவபிள்ளைகளாகிய நாம் அனைவரும் சந்ததி சந்ததியாய் அழைக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது, உலகத்தால் கறைபடாதபடி தம்மைக் காத்துக்கொண்டது போல தேவபிள்ளைகளாகிய நாமும் வாழ கற்றுக்கொள்வோம். உங்களை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவர் (1 பேது 2 : 9) . மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத் 5 : 14-16). உடையின் நேர்த்தியை வற்புறுத்தி செய்யும் போதனைகளில் தேவநாமம் மகிமைப்படும்.

இவ்வுலகமானது, புறம்பான அலங்கரிப்புக்கும் உடைகளுக்கும் மிகவும் முக்கியத்துவம் தருகின்றது.நம் சரீரத்திற்குதான் ஆடைகளே தவிர, அதை வெளிக்காட்டும் வண்ணம் உடை வடிவமைப்பு இருப்பதை இன்று நாகரிகமாக கருதி, அதை வாங்கி அணிந்து, பெருமிதம் கொள்பவர்கள் அநேகர்.தேவவார்த்தை, வெளிப்புறமான அலங்கரிப்பைக் குறித்து நம்மை எச்சரிக்கிறது.

**ஏன் உடைகள் முக்கியத்துவம் வாய்ந்தவைகள்?**

தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1 கொரி 6 : 20). 1 சாமு 16 : 7 ல் சொல்லப்பட்டுள்ளபடி மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதத்தைப் பார்க்கிறார். கர்த்தர் நம் இருதயத்தைப் பார்க்கிறபடியால் கிறிஸ்தவர்களாகிய நாம், மற்ற மனுஷர்களுக்கு முன்பாக சாட்சியான வாழ்க்கை வாழ வேண்டும்.ஒருவருடைய இருதயம், நம்பிக்கை, முக்கியத்துவங்கள், சுயமரியாதை இவை அனைத்தின் பிரதிபலிப்பும் ஒருவருடைய புறம்பான தோற்றத்தை கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. தேவபிள்ளைக ளுடைய உடைகளும், தோற்றமும் மற்றவர்களுக்கு சாந்தம், அமைதி, பரிசுத்தமாகிய தேவனுடைய குணாதி சயங்களை நம்மைக் கொண்டு பிரதிபலிப்பதாய் அமைய வேண்டும்.

**வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாணம் என்பது என்ன?**

ஆதியிலே, ஆதாமும், ஏவாளும் பாவமனுஷர்களான பின்பே தாங்கள் நிர்வாணிகள் என்று உணர்ந்து கொண்டார்கள்.அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள். தேவனுக்குப் பயந்து ஒளித்துக்கொண்டார்கள். அவர்களுக்காக தேவன் முதலாவதாக செய்த காரியம் தோல் உடைகளை அவர்களுக்கு உடுத்தினார் (ஆதி 3 : 7-10, 21). நிர்வாணம் என்பது வெளிப்படையான முழு நிர்வாணத்தை குறிப்பதல்ல. ஏசாயா 47 : 2-3 ல் வெறுங்காலும் அம்மணத் தொடையுமாய் என்று ஸ்திரீயானவளைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. (அதாவது மூட்டுகளுக்கு மேல்) என வெளிப்படுத்தப் பட்டுள்ளது. மீன் பிடித்துக்கொண்ட பேதுருவைக்குறித்தும், அவன் கர்த்தர் என்று சீமோன் பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனாயிருந்தபடியால், தன் மேற்சட்டையை கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான் (யோவான் 21 : 7) .ஸ்மித்தின் வேத அகராதிப்படி, அன்றைய காலகட்டத்தில் ஆண்களும், பெண்களும்

*தேவபிள்ளைகளாகிய நாம் அணியும் உடையும் நம் தோற்றமும் தேவாதி தேவனுடைய சாந்தம், பயபக்தி பரிசுத்தத்தை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்*



*தேவபிள்ளைகளுடைய உடையின் அளவுப்பிரமாணம் என்பது எளிமையாக இருப்பதே ஆகும்.*

இறுகலான, நீளமான சட்டை போன்றதான உள்ளாடைகளை அணிந்திருந்தார்கள். அதில் ஒருவகை கையில்லாத, மூட்டுக்கள் வரை நீளமானது. இன்னொரு வகை மணிக்கட்டு மற்றும் பாதம் வரையிலானது. இதற்கு மேலே இன்னொரு ஆடை மிகவும் நீளமானதாய் அணிவார்கள். இந்த மேலாடை அணியாதவர்களே நிர்வாணிகள் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவேதான் பேதுருவும் கூட, வஸ்திரமில்லாதவனாயிருந்த படியால் என்றும் சொல்லப்பட்டும் கூட, அங்கே அவர் நிர்வாணியாயில்லாமல் தன் மேற்சட்டையை எடுத்து போட்டுக் கொண்டார் என கூறப்பட்டுள்ளதை காண முடிகிறது (1 சாமு 19 : 24 ஐ பார்க்க) . இந்த வசனங்களெல்லாம் தேவனுடைய தீர்க்கதரிசன வெளிப்படுத்துதலைக் காட்டுகிறது. இன்று இந்த உலகிலே வாழ்கிற நம்மில் பல ஜனங்கள் அரைகுறை ஆடைகளையும், அரைக்கால் டவுசர்களையும் அணிந்துகொண்டு அலைகிறார்கள். இது தேவனுடைய சத்தியத்தை மீறி நடப்பதைக் குறிக்கிறது.

### ஆண் / பெண் வேற்றுமை

புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது. ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது. அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (உபாகமம் 22 : 5). பெண்கள் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்த்து, ஆண் பெண் வேறுபாட்டை உணர்த்தும் வேத சத்தியத்திற்கு செவிசாய்த்து நடக்கக்கடவோம். இந்த நவீன உலகத்திலே சில கலாச்சார மாற்றங்க ளினிமித்தம் உடை, பாவனைகள் மாற்றம் ஏற்பட்டால், அவர்களிடத்தில் தேவஆசீர்வாதம் இல்லை என்று சொல்ல முடியாது. ஏதாவதொரு வகையான உடை அது. ஆண் பெண் வேறுபாட்டை கெடுக்குமாயின் அது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.தேவனுடைய கற்பனைகளை மீறி தங்களுடைய தோற்றத்திற்காகவே முதல் முக்கியத்துவம் தருகிற ஜனங்களாய் இன்று வாழ்ந்து வருகிறோம். ஸ்திரீகள், தங்களுக்கு தேவன் தந்த கட்டளையை மீறியதாலே இன்று ஆண்கள் அணியும் பேண்ட், சார்ட்டுகளை அணிகிறார்கள்.இப்படி செய்வது இக்கால பழக்கவழக்கமாயிருப்பினும் கூட, தேவ திட்டத்தை மீறுவதைக் காட்டுகிறது. நம் வீட்டிலும், சமுதாயத்திலும் நமக்கு தேவன் நியமித்தவைகளை மீறுகிறோம்.

### அடக்கம் / பணிவு அறிவுறுத்தப்படுகிறது

1 தீமோ 2 : 9 ல் பவுல் இவ்வாறு கூறியிருக்கிறார்.ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தி யுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்.
தேவபிள்ளைகளாகிய நாம் எளிமையான உடை அணிய பழகிக்கொள்ள வேண்டும். ஆண்கள், பெண்கள் இருவருமே அணியும் உடையில் ஆபாசம் இருக்க கூடாது. நேர்த்தியான சரியான ஆடைகளையே அணிய வேண்டும். மற்ற மனிதர்களைப் போல தேவ பிள்ளைகளாகிய நாம் இருக்ககூடாது.

ஸ்திரீகள் “ சாதாரண ஆடை ” அணிவதனால் சில ஆவிக்குரிய காரியங்களுக்கு கீழ்ப்படிந்தவர்களாய் பிறருக்கு முன்மாதிரியாய் இருக்கலாம். அரைகுறை ஆடைகள் பெண்களுக்கு ஏற்றதல்ல. அதுபோலவே மிகவும் நீளமான சில உடைகளும் கூட ஆபாசமாக வடிவமைக்கப்பட்டிருக்கும்போது அது ஏற்றதாக இருக்காது.
விலையுயர்ந்த வஸ்திரங்களை அணிய வேண்டும் என வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆகவே தேவனுடைய பரிசுத்தவான்களாகிய நாம் செல்வ பெருக்கத்தினால் மினுமினுப்பான ஆடைகளை அணியவேண்டியதில்லை. அணியும் ஆடைகள் எளிமையாய் இருக்க வேண்டும். “ அலங்கரிப்பு ” என்பது நேர்த்தியைக் குறிக்கிறது. கிறிஸ்தவர்களின் உடையிலும் தோற்றத்திலும் மெத்தனமும் சோம்பலும் வெளிக்காட்டப்படலாகாது. உடையானது நேர்த்தியானதாய் இருக்க கடவது.

**தன்னடக்கம் தேவவார்த்தைக்கு கீழ்ப்படிவதை காட்டுகிறது**

நாகரிகமும், நடை, உடை, பாவணைகளும் வரும் போகும்.ஆனால் வேதசத்தியங்கள் ஒருபோதும் மாறாது.

நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுருபமாகுங்கள் (ரோமர் 12 : 2). தேவபிள்ளைகளாகிய நாம் பிதாவாகிய தேவனை வருத்தப்படுத்தாமல், பரிசுத்தவாழ்வை வாழ போராடி இந்த உலகத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே உடையிலும் கவனம் தேவை.உலகம் சாத்தானுடைய பிடியில் இருக்கிறது. முட்டாள்தனமான அந்த ஆவிகளினின்று தனித்து போராடி ஜெயம் காண்பதை தேவபிள்ளைகளின் கடமையாகும்.

**இவ்வுலக இச்சைகளுக்கு அடிபணியக்கூடாது**

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின்



அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோவா 2 : 15-17).

இன்று கண்களின் இச்சை, ஆபாச உணர்வை ஏற்படுத்துவது நாம் அணியும் ஆடையில் தான் ஆரம்பிக்கிறது.இதிலே பெண்களை மாத்திரம் சொல்வதற்கில்லை. சில நேரங்களில் ஆண்களும் கூட தங்கள் உடைகளில் கவனமின்றி செயல்படுவது மாம்ச இச்சைக்கு காரணமாகி விடுகிறது.

நம் உணர்வுகளையும், பாவணைகளையும் மாற்றும் தன்மை நாம் அணியும் ஆடைக்கு உண்டு.ஒரு சிறுகுழந்தைக்கு விதவிதமான ஆடைகளை உடுத்தி, ஒவ்வொரு முறையும் அவர்களுடைய செயல்களை சிந்தித்துப் பாருங்கள், புரியும்.

அதுபோலவேதான் இளைஞர்களும் தங்களின் உள்ளான ஆவி தேவன் வாசமாயிருக்க ஏற்றதாயிருக்கும் உங்களை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு (1 தீமோ 4 : 12). உள்ளான ஆவியினாலே நம் நடைமுறை வாழ்க்கையிலும் பரிசுத்தம் காணப்படும்.

**நகைகள் மற்றும் அணிகலன்கள்**

1 தீமோ 2 : 9 ல் பொன்னினாலாவது, விலையேறப்பெற்ற முத்துக்களினாலாவது தங்களை அலங்கரியாமல் என்றும் 1 பேது 3 : 3 மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் என்றும் கூறப்பட்டுள்ளது. சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்தை நெறித்து நடந்து கண்களால் மருட்டிப்பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுடைய எல்லா ஆபரணங்களையும் உரிந்து போடுவார் (ஏசாயா 3 : 16-24) . ஆபரணங்களும் நகைகளுமாகிய - கம்மல்கள், ஆரங்கள், மோதிரங்கள், மூக்குத்திகள்.

இவைகள் பொன் மற்றும் வெள்ளியினால் மாத்திரம் செய்யப்பட்ட வைகளல்ல. இக்கால பேஷன் ஜுவல்லரி இவைகளும் இதனுள் அடங்கும். ஏனெனில் தேவ வார்த்தையானது எல்லா சந்ததிக்கும் பொருந்தும். ஆகவே வேதத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள காரியங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

*தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் உள்ளான ஆவியின் பணியினால் தங்களை அலங்கரிக்கும்போது வெளியரங்கமான வாழ்வில் பெலனுண்டாகும்*

### அலங்கரிப்பும் ஆபரணங்களும்


நம்முடைய முகம் மற்றும் சரீரத்திற்கு பொலிவையும் அழகையும் மெருகேற்ற வேண்டும் என்று எண்ணி, இன்று கலாச்சார மாற்றங்களினால் செய்யப்படுகிற பலவிதமான அலங்கரிப்புகளால் நம் பரிசுத்தம் அழிந்துபோகிறது. அதாவது பவுன்டேசன், லிப்ஸ்டிக், மஸ்காரா, ஐலைனர், ரப், நெயில்பாலிஷ், மெனிக்கேர், பெடிக்கேர், டாட்டூஸ் என்று விதவிதமான பெயர்களில் அலங்காரம் நம் தலைமுறை வாலிபர்களிடையே பிரபலமாகி விட்டது. நம் சரீரம் தேவனுடைய ஆலயம் என்பதை மறந்துவிடாதீர்கள். தேவன் அவருடைய சத்தியத்தை பிறருக்கு போதிப்பதை மாத்திரமல்ல, அதன்படி நடந்து, பிறருக்கு முன்மாதிரியாக திகழ விரும்புகிறார்.

### சிகை அலங்காரம்

இன்று விதவிதமான சிகை அலங்கரங்களும் இளைஞர்கள் மத்தியிலே பெரும் பாதிப்பை கொண்டு வருகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் வாழ்கிற இடம், நாடுகளுக்கேற்ப விதவிதமாக ஹேர் ஸ்டைல் செய்துகொள்கிறார்கள். இதைக்குறித்தும் வேதாகமத்தில் ஒழுங்குகள் கூறப்பட்டுள்ளது. “புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாருக்கிற தென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறதே” (1கொரி 11 : 14 – 15). இயேசு கிறிஸ்துவின் வேத சத்தியத்தின்படி ஸ்திரீகள் மயிரை நீளமாக வளர்க்கலாம். ஆனால் ஆண்களுக்கோ முடியை வெட்டும்படியாக சொல்லப்பட்டுள்ளது.

அளவுப்பிரமாணம் இல்லாவிடில் ஒரு கொள்கையானது வெறுமையாக்கப் படுவதுமல்லாமல் நடைமுறையில் சாத்தியமற்றதாக மாறிவிடும்

ஆண்கள் தங்கள் தலைமயிரை வெட்டிக்கொள்ளும் விதத்திலும், பெண்கள் தங்களுடைய முடியை நேர்த்தியாக வைத்துக்கொள்வதிலும் எளிமையும், பணிவும் வெளிப்படும். சிகை அலங்கார பொருட்களை உபயோகிக்க கூடாது.




### நியாயந்தீர்ப்பதில்லை

தேவனாகிய கர்த்தருடைய அளவுப்பிரமாண மானது இவ்வுலகத்தினால் மாற்றப்பட்டு போகிறது. ஒருவன் என் வார்த்தைகளை கேட்டும்,

விசுவாசியாமற்போனால் அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை. ...நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12 : 48). ஒவ்வொரு தேவபிள்ளையும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும், அவர் ஒருபோதும் தவறாக வழிகாட்டமாட்டார். தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களை சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொண்டு தங்களுக்குள்ளே தங்களை ஒப்பிட்டுக் கொள்கிற அவர்கள் புத்திமான்களல்ல... தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப்பிரமாணத்தின்படியே மேன்மைபாராட்டுகிறோம் (2கொரி 10 : 12, 18). பிறருடைய வெளியரங்கமான காரியங்களைக் குறித்தும் அவர்களுடைய இரட்சிப்பைக் குறித்தும் பேசும்போது கவனமாய் இருக்க வேண்டும், எல்லாரும் தேவனுடைய வெளிச்சத்திற் குள்ளாக்கப்பட்டவர்களே.

### உங்களுக்கென்று அளவுபிரமாணத்தை நிர்ணயுங்கள்

பரிசுத்தவான்கள் தங்களுடைய அனுதின வாழ்வில் எந்த அளவுக்கு பரிசுத்தத்தின் எலலைக்குட்பட்ட பிரமாணங்களில் நிலைத்து ஜீவித்தார்கள் என்பது ஆச்சரியமானது. ஒரு அளவுப் பிரமாணம் என்பது இல்லாவிடில் அநேக கோட்பாடுகள் வெறுமையாக்கப்படுவதுமன்றி, நடைமுறையில் சாத்தியமற்றதாகிவிடுகிறது. அதாவது வறையறுக்கப்பட்ட இந்த உடைகள் மாத்திரமே என்று வேதத்தில் குறிப்பிட்டு ஆடையின் நீள, அகல அளவுப்பிரமாணங்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால் நிர்வாணம் என்பது மூட்டுக்கு மேலாக அரைகுறை ஆடை அணிவதை குறிக்கிறது மாத்திரமல்ல, 3/4 என சொல்லக்கூடிய ஆடைகளும் இதில் அடங்கும்.

இவையெல்லாவற்றையும் விட ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் உணர்வடையும்போது மாத்திரமே தேவ வசனம் வெளிப்படும். தேவனுடைய பரிசுத்த ஜனங்களிடையே இதைக்குறித்ததான பல தர்க்கங்கள் மாற்றுக்கருத்துகள் இருக்கலாம். ஏசாயா 62 : 10ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தைக்கு யார் பதில் செல்ல பாத்திரர்? “வாசல்கள் வழியாய் பிரவேசியுங்கள் பிரவேசியுங்கள்; ஜனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்துங்கள்; பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள், அதிலுள்ள கற்களை பொறுக்கி போடுங்கள்; ஜனங்களுக்காக கொடியை ஏற்றுங்கள்”.

**கீழ்படிதலினால் வரும் சந்தோஷம்**

பாவமுள்ள இந்த உலகில், பரிசுத்தமானது நம்மை உயர்த்தி வாழ வைக்கிறது. பரிசுத்தத்திற்கென்று தேவன் வகுத்த வெளிபுற அளவுப்பிரமாணங்கள் மிகவும் பிரயோஜனமானது சுத்த இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள், வெறும் கட்டளைகள் என்பது மாத்திரம் அல்ல தேவனுடைய ஆவி கிரியை செய்யும் போது மட்டுமே, உலகத்தை ஜெயிக்க முடியும் “நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம், அவருடைய கற்பனைகள் பாரமானவைகள் அல்ல” (1 யோவான் 5 : 3). தேவனுடைய வசனத்தில் நிலைத்திருப்பதே ஒரு சிறந்த வாழ்க்கைக்கு அடையாளம்.

தேவனுக்கு செய்ய வேண்டிய பணிவிடைகள் என்பது நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதில் குறைவுபடக் கூடாது. தேவமனுஷர்களின் வெளிப்புற தோற்றமே நாம் தேவராஜ்யத்தின் குடிமக்கள் என்பதை காண்பிக்க வேண்டும்.

## நான் இந்த ஆடையை அணியலாமா?

(நம்முடைய சுயபரிசோதனைக்கான கேள்விகள்)

- ஏன் இதை நான் அணிய விரும்புகிறேன் ?
- இது என்னை எப்படி உணர வைக்கிறது ?
- என் சரீரம் முழுவதும் மறைக்கப்பட்டிருக்கிறதா ? அரை குறையாகவோ அல்லது இறுகலான ஆடையாகவோ உள்ளதா ?
- இது நாகரீகமானதா ?
- நான் இந்த உலகத்திற்கு கற்றுக்கொடுப்பது என்ன ?
- அமைதியையும், எளிமையையும் காட்டுகிறேனா ?
- கர்த்தர் என்நிமித்தம் மகிழ்கின்றாரா ?

## க லா ச் சா ர ம்



ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும், ஒரு சந்ததியினருக்கும் வரும் சந்ததியினருக்கும் நிறைய கலாச்சார வேற்றுமைகள் உள்ளது. ஒரு குறிப்பிட்ட வகை உடை என வேதத்திலே குறிப்பிட்டு சொல்லவில்லை.மாறாக ஒரு அளவுப் பிரமாணம் என்பது இக்கலாச்சார பழக்கவழக்கங்களையும் தாண்டி நாம் கடைபிடிக்க வேண்டிய ஒன்று.ஒருவேளை நமது கலாச்சார உடைகள் தேவ வார்த்தையை மீறுகிறதாய் இருப்பின் கவனமாய் செயல்பட வேண்டும். அமெரிக்காவில் வாழ்கிற ஒரு பெண் பாவாடை, சட்டை அணிகிறாள். மாலவியில் சிட்டென்ஜி அணிகிறார்கள். இந்தியாவில் பெண்கள் ஜாக்கெட், சேலை அணிகிறார்கள். பாகிஸ்தானில் பெண்கள் சல்வார் அணிகிறார்கள்.இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளகூடிய, எளிமையான, நீளமான, நேர்த்தியான ஒழுங்கான உடைகள்தான்.

ஒரு காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் அணியும் உடைகளே அவர்களை அடையாளம் காட்டுவதாய் அமைந்திருந்தது. அப்படிப்பட்ட சமுதாயத்திலே வாழ்கிற ஒரு தேவபிள்ளை தகுதியான உடை அணிய வேண்டும். உதாரணமாக இன்று மேற்கத்திய நாடுகளில் நீல நிற சட்டை அணிபவர்கள் ஓரினச்சேர்க்கையாளர் ஆதரவாளராக கருதப்படுவர்.ஆகவே இதுமாதிரியான இடங்களில் கவனமாய் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.இன்னும் காலங்கள் செல்ல செல்ல, அந்த நீலநிறச்சட்டைக்கான கொள்கை மறைந்துவிட்டபின், திரும்பவும் அதை அணிவது தவறு என்று சபைகளில் போதிக்கப்படுவதில்லை.

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி : பேன்ட், பெண்களுக்கு சரியான உடைதானா?**

இதைக் குறித்த பதிலை காணுமுன் 1 தீமோ 2 : 9 ஐ பார்க்கவும் ஸ்திரீகளும் தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும். " சாதாரண ஆடை" என்பது கிரேக்க மொழியில் " ஒழுக்கமான அடக்கமான முறை " என பொருள்படும். புதிய ஏற்பாட்டின் அகராதி வெளிப்பாட்டின்படி பணிவு அல்லது அடக்கம் என்பது நேர்த்தியான, சீரான,கண்ணியமான,சாதாரணமான என பொருள்படும். இது ஒருவருடைய நல்லொழுக்கத்திற்கும் நடத்தைக்கும் பொருந்தும்.

ஹேட்டஸ்டோல் எனும் கிரேக்க வார்த்தையில் ஹேட்டா என்பது ஒரு தாழ்வான நீளமான ஆடை , ஸ்டோல் என்பது வெளிப்புறமாக சுற்றியுள்ள நீளமான, காற்றோட்டமான ஆடை. ஹேட்டஸ்டோல் என்பதன் பொருள் நீளமாக அணியக்கூடிய ஒரு உடை என்பதே(புதிய ஏற்பாட்டு கிரேக்க அகராதி) .மேலும் ஹேட்டஸ்டோல் என்பது நீளமான உடை அல்லது பாதம் வரை நீளக்கூடிய கயிறு போன்ற உடை (முழுமையான வார்த்தை ஆய்வு அகராதி, ஒத்தவாக்கிய பைபிள்).

**உரையாசிரியர் ஆதாம் கிளார்க் ன் ஹேட்டஸ்டோல் பற்றிய உட்பார்வை**

கிரேக்க மற்றும் ரோமர்களின் உடையைக் குறித்த அப்போஸ்தலர்களின் விளக்கங்கள்.ஸ்டோலோ, என்பது எளிமையான ஒரு நீளமான துணி, நடுவில் இரண்டாக மடித்து இருபுறங்களிலும் தைத்து அணிவதற்கு வசதியாக கைகளுக்கு இடம் ஒதுக்கி அதன் மேற்பாகத்தில் தலைவழியாக அணிவதற்கேற்ப இடம் விட்டு பாதம் வரை தொடும் விதமாக இருபுறமும் தொங்கவிடப்பட்டு இடைக்கச்சை கட்டி, இவ்விதமாக அந்த ஆடை வடிவமைக்கப்பட்டது. இது கை பொருத்தப்படடோ, அல்லது கை பொருத்தப்படாமலோ இருக்கும். இரண்டு பக்க தோள்பட்டைகளிலும் கிளிப் அஜஸ்மென்ட் காணப்படும். சில கிரேக்க பெண்கள் மற்றும் சிறுமிகள் மட்டும் சவர்ஸ் (டிஸ்கவர்ஸ்) என்று சொல்லப்படுகிற ஒரு விதமாய் அந்த ஆடையை உடுத்துவார்கள்.

ஹேட்டஸ்டோல் என்பது அங்கி (அ) கையற்ற மேலாடை போன்றதான ஒருகை ஆடையே. ஏறத்தாழ ஸ்டோலா போன்றே நீளமாக இடுப்பு வரை முன்னும் பின்னும் தொங்ககூடிய, தோள்பட்டைகளில் பட்டன் கொடுக்கப்பட்டு, தலை வழியாக அணியும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஸ்டோலா எனும் உடைக்கு மேலாக தளர்வாக அணியக்கூடிய அரைக்கச்சையை கொண்டு உடுத்தும் விதமாய் அமைந்திருக்கும். கிரேக்கர்களை விட அதிக நாகரீகமாக உடை அணிபவர்கள் வேறு யாரும் இல்லை . 1805 ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இங்கிலாந்து நாட்டில் எளிமை, நாகரீகம், அழகு இவையெல்லாவற்றையும் ஒன்றிணைத்து ஒரு கணக்கீடு எடுக்கப்பட்டது.ஆனால் அது விரைவில் இன்னொரு முறைக்கு வாய்ப்பளித்தது.அது களைப்பாகவும், முட்டாள்தனமாகவும் இருந்தது.அதுவே நீண்ட காலத்துக்கு மிகவும்அறிவார்ந்த முடிவாக கருதப்பட்டது.வெளிப்புறமாக வண்ணமயமாக காட்சியளிக்கும் இவ்வுலகிலே பாதிக்கப்பட்டுப் போனது மத எளிமை என்பது.



வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களுக்கான ஆடை வரையறை என்பது நீளமான அங்கி போன்ற ஆடை – சாதாரண, கண்ணியமான, நீளமான, தளர்வான ஆடை. இறுகலான உடை அதாவது பேண்ட் என்பது சௌகரியமான உடை அல்ல. அதுபோலதான் குட்டை பாவாடை, நாகரீகமற்ற ஆபாசமான உடைகள், இறுகலான உடைகள் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஏற்புடையதல்ல.

வேதத்திலே புருஷனுடைய ஆடைகளை பெண்கள் தரிக்கலாகாது என்றும் சொல்லப்பட்டுள்ளதால் அது ஸ்திரீகள் அணிய ஏற்புடையது அல்ல அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (உபாகமம் 22 : 5).

“ சணல்நூல் சல்லடங்கள் ” என்கிற ஆசாரியர்கள் உடுத்தும் ஒரு வஸ்திரத்தை பழைய ஏற்பாட்டில் (யாத் 28 : 42) ல் காண்கிறோம். எபிரெய அகராதிப்படி சல்லடங்கள் என்பது மூட்டு வரை நீளக்கூடிய அரைக்கால் பேண்ட் ” வேதாகம நாட்களிலே பெண்கள் பேண்ட் போன்ற ஆடைகளை அணிய மாட்டார்கள். மேற்கத்திய நாடுகளில் 20 வது நூற்றாண்டு வரை பெண்கள் அரைக்கால் பேண்ட்கள்அணிந்ததில்லை.ஆனால் உலகப்போர் மூண்டபோது ஆண்கள் யுத்தத்திற்கு சென்றுவிடுவதால், அந்நாட்களில் குடும்பத்திலுள்ள பெண்கள் வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டது.இதன்மூலம் ஆரம்பமான ஆடை மாற்றம்தான் பிற்காலத்தில் முழுவதுமாக மாறி, பெண்கள் வீட்டுவேலைகளை கவனிப்பதை விட்டுவிட்டு, ஆண்களுக்கு நிகர் என்ற நிலை சமுதாயத்தில் பெருகிவிட்டது.



ஆகவே இப்படியாக சமுதாயத்தில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் தேவன் தந்த நிலைகள் மாறிப்போய், தேவ கட்டளை மீறப்பட்டுவிட்டது. பேண்ட் என்பது அதிகாரத்தின் அடையாளம். ஆகவே குடும்பத்தில் யார் பேண்ட் அணியலாம்? துரதிஷ்டவசமாக, பரிசுத்தமான பல தேவஜனங்கள் இதைக்குறித்த வாக்குவாதத்தில் ஈடுபட்டு வேத சத்தியத்திற்கு விலகி நிற்கிறார்கள்.

தேவன் ஆணையும், பெண்ணையும் தனித்தனியாக சிருஷ்டித்து, அவரவருக்கு ஒப்புவிக்கப்பட்ட நியமத்தின்படி வாழ அவர் விரும்புகிறார்.ஆனால் இன்றைய சமுதாயமானது ஆண், பெண் சமநிலை கருதி, வேறுபாடு களைய எண்ணும்போது, ஆடை என்பதும் வேறுபாடு காட்டாமல் தீர்மானிக்கப்படுகிறது. ஆண்களுடைய சர்வதேச அடையாளமாக பேண்ட் அணிந்த ஒரு ஆணின் புகைப்படம் குளியலறை முன் அடையாளமாக ஒட்டப்பட்டிருக்கும்.அதுபோலவே தான் பெண்களின் அடையாளமும். பாவ உலகில் வாழும் மனிதர்கள் ஆண், பெண் வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளும்விதமாக ஆடை அணிதல் இருக்க வேண்டும்.

பேண்ட் என்பது

அதிகாரத்தின் அடையாளம்,

ஆகவேதான்

இந்த கேள்வி

குடும்பத்தில்

யார் இந்த உடையை

அணியலாம்

மேற்கத்திய நாடுகளிலே இந்த சமுதாயத்திற்கு அப்பாற்பட்டு, பெண்கள் சாதாரண உடை அணிவதனால் அவர்கள் “பரிசுத்தமான ” ஜனங்களாக அறியப்படுகிறார்கள்.ஆகவே சாதாரண உடை என்பது பரிசுத்தத்தை வலியுறுத்தும் அடையாளமாக புறஜாதியாரால் பார்க்கப்படுகிறது.

கடந்த 6000 ஆண்டுகளாகவே, பாரம்பரியமாக பெண்கள் நீளமான அங்கி போன்ற வஸ்திரங்களையே தரித்து வந்தனர்.கடந்த 100 ஆண்டுகளாக அது மாதிரியான ஆடைகள் புழக்கத்திலும், பயன்பாட்டிலும் இல்லை.

தற்போது அந்த பாரம்பரியம் முற்றிலும் மறைந்து ஸ்திரீகளின் அடையாளமும், பெண்களின் பாரம்பரிய உடை பாவனைகளும் மறைந்துவிட்டன. கர்த்தருடைய வார்த்தையும், அவர் வழியும் என்றும் மாறாமல், சரியாய் நிலை நிற்கும்.ஆகவே கிறிஸ்தவன் என்று சொல்லப்படுகிற ஆணும், பெண்ணும் அதற்கேற்றவிதமாய் வாழவேண்டும்.அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடக்க வேண்டும். பெண்கள் பேண்ட் அணிவது என்பது வேதசத்தியத்துக்கு புறம்பானது.அவருடைய வருகை மட்டும் தங்களை பரிசுத்தமாய் எல்லாவிதத்திலும் காத்துக்கொள்ளும்படியாக, தேவபிள்ளைகளுக்கு, தேவன்தாமே ஞானத்தை தருவாராக.

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

### உங்களுக்குத் தெரியுமா?



குதிங்கால் உயர்ந்த காலணிகளை அணிவது வேதசத்தியத்தின்படி போதிக்கப்படுகிற பரிசுத்தம், பணிவு, தாழ்மை இவற்றை கைக்கொள்வதின் அடையாளமாய் தோன்றுகிறதா? இந்த வார்த்தையிலே இதன் பதிலும் உள்ளது.

காலின் பின்பகுதியை நீட்டிக்கச் செய்வதுதானே என்று இப்போது பேசுகிறோம். ஹீல்ஸ் என்பது உயரத்திற்கானது மாத்திரமல்ல, அதேசமயம் நீங்கள் நடக்கும் விதம், உங்கள் உணர்வையும் அது தீர்மானிக்கிறது. நீங்கள் நேர்மையும் மகத்துவமுமானவர்கள். உங்கள் மாம்சம் அந்த வழியை விரும்பினால் நீங்களும் அப்படியே செயல்படுவீர்கள்.

**– "ஏன் ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர் குதிங்கால் உயர்ந்த காலணிகளையே" எப்போதும் அணிகிறார் என்பது அலெக்சந்திர சல்மானின் கேள்வி**


ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்படுதல்

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப் பட்டவனுமாகிய பவுல் – ரோமர் 1:1

தேவனுடைய ஊழியத்திற்கென்று அழைக்கப்படுவதைத் தவிர மேலானது வேறொன்றுமில்லை இவ்வுலகத்தின் ஆஸ்திகளை சம்பாதிப்பதைவிட நம் இராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தருக்கு ஊழியஞ்செய்வது எவ்வளவு மேன்மையும், மகிமையுமானது, விசுவாசத்திலே தரித்திருந்து, கர்த்தருக்கு ஊழியஞ்செய்வது என்பது நம் சிந்தையினாலாகிய ஒரு வேலை அல்ல. அது பரமனின் அழைப்பு.

தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தம் பரிசுத்த ஜனங்களை ஊழியத்திற்கென்று ஒவ்வொருநாளும் அழைத்து வருகிறார். தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கும் ஊழியங்கள் வேறு வேறுவிதமானதாயினும், ஒவ்வொருவருக்கும் முழுமனதோடும் தங்கள் நேரத்தை, ஊழியத்திற்கென்று தாகத்தோடு தேவபணியை தொடர்ந்து செய்யுங்கள்.



பவுல், தேவனுடைய சுவிசேஷ பணிக்கென்று அழைக்கப்பட்டு மற்றவர்களினின்று பிரித்தெடுக்கப்பட்டார். உலகத்தின் ஆசாபாசங்களை கடந்து வாழ்நாள்முழுவதும் தேவபணியை செய்யும்படியாய் அவர் தெரிந்தெடுக்கப்பட்டார். கர்த்தருக்குள் பகுதி நேர ஊழியராய் அர்ப்பணிக்க முடியும். ஆனால் தேவ அபிஷேகத்திலே அதற்கு இடமில்லை. இந்த உலகத்தைவிட்டு பிரித்தெடுத்து, தனித்துவமாய் ஊழியம் செய்ய வேண்டிய அவசியம், இந்த தலைமுறைக்கான ஊழியத்தேவைகளில் ஒன்றாய் இருக்கிறது. நம் தேசத்திலும் வெளிதேசத்திலும் முழு அர்ப்பணிப்போடு ஊழியஞ்செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம்.

நீங்கள் தேவனுடைய அழைப்புக்கு பாத்திரவான்களாய், தெரிந்து கொள்ளப்பட்டு வேறு பிரித்தெடுக்கப்பட்டு உண்மையாய் தைரியமாய் விசுவாச ஊழியத்தை மனபெலத்தோடு செய்வீர்களாகில், நம் எஜமானன் இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்.

**தொடர்புக்கு:-**

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. PHONE : 04259 - 280488 CELL: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316